திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது

11 நாட்கள் காட்சி தரும்

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் கோவில் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பிரசாத விற்பனை நிலையம் மற்றும் ஆன்மிகப் புத்தக விற்பனை நிலையம் ஆகியவற்றை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து, விற்பனையை துவக்கி வைத்தார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

திருவண்ணாமலை, டிச.7

திருவண்ணாமலை அருணாச லேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக 2,668 அடி உயர மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது.

திருவண்ணாமலை யில் உள்ள உலகபிரசித்தி பெற்ற அருணாச லேஸ்வரர் கோவிலில் நடைபெறும் கார்த்திகை தீபத்திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது.

கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் 2 ஆண்டுகளுக்கு பிறகு முன்பிருந்ததை போல் விழா நடைபெற்றது. அதன்படி இந்த ஆண்டுக்கான கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 27ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழா நாட்களில் தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் உலாவும் இரவில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாடவீதிகளில் உலாவந்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் கடந்த 3ந் தேதி சிறப்பாக நடைபெற்றது. 'அரோகரா' கோஷத்துடன் பக்தர்கள் வெள்ளத்தில் தேர்கள் மாடவீதிகளை வலம் வந்தன.

நேற்று அதிகாலை 3.35 மணிக்கு வேதமந்திரங்கள் முழங்க பரணி தீபம் ஏற்றப்பட்டது. பின்னர் அதிலிருந்து பஞ்சமுக தீபம் ஏற்றப்பட்டது.

விழாவின் சிகர நிகழ்ச்சியான 2,668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றும் நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது.

கோவிலில் சாமி சன்னதியில் இருந்து பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் ஆடியபடி தனித்தனியாக வெளியே வந்து சாமி சன்னதி முன்பு உள்ள தீப மண்டபத்தில் இருந்த தங்க விமானத்தில் எழுந்தருளினர்.

அர்த்தநாரீஸ்வரர் காட்சி

அதைத்தொடர்ந்து சுமார் 6 மணியை நெருங்கும்போது ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர், சாமி சன்னதியில் இருந்து ஆடியபடியே கொடிமரம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பின்னர் சாமி சன்னதி முன்பு அகண்டதீபம் ஏற்றப்பட்டது. அதேநேரத்தில் 2,668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது.

அதனை கண்டு தரிசிப்பதற்காக நகர் முழுவதும் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்களும் கிரிவலம் சென்று கொண்டிருந்த பக்தர்களும், நகரின் வீதிகள் மற்றும் வீடுகளின் மாடிகளில் நின்றிருந்த பக்தர்களும் 'அண்ணாமலையாருக்கு அரோகரா' என்ற பக்திகோஷம் எழுப்பினர். இந்த மகாதீபம் 11 நாட்கள் காட்சி தரும்.

பாதுகாப்பு பணியில் 20 ஆயிரம் போலீசார்

விழாவையொட்டி சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து சிறப்பு ரெயில்களும், பஸ்களும் இயக்கப்பட்டன. திருவண்ணாமலையில் பாதுகாப்பு பணியில் சுமார் 20 ஆயிரம் போலீசார் ஈடுபட்டிருந்தனர். 11 டிரோன்கள் மூலமும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, மாவட்ட கலெக்டர் முருகேஷ், போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன், மாவட்ட வருவாய் அலுவலர் பிரியதர்ஷினி, வடக்கு மண்டல ஐ.ஜி.கண்ணன், கோவில் இணை ஆணையர் அசோக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இன்று சந்திரசேகரர் தெப்பல் உற்சவம், நாளை (வியாழக்கிழமை) பராசக்தி அம்மன் தெப்பல் உற்சவம், நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) சுப்பிரமணியர் தெப்பல் உற்சவம், 10ந் தேதி சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் விழா நிறைவு பெறுகிறது. இந்த உற்சவம் கோவில் அய்யங்குளத்தில் நடைபெறுகிறது.

கனமழை எச்சரிக்கை எதிரொலி: தலைமைச்செயலாளருடன் வானிலை ஆய்வு மைய அதிகாரி ஆலோசனை

சென்னை, டிச.7

தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதன் அருகில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, புயல் சின்னமாக உருவாக வாய்ப்பு உள்ளது. இதனால் கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் மூலம் எச்சரிக்கை கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தலைமைச்செயலகத்தில் நேற்று தலைமைச்செயலாளர் இறையன்புவை தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் சந்தித்தார். அப்போது வரக்கூடிய மழை, புயல் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர். இந்த சந்திப்பின்போது, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதால், புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் தொடர்ந்து கன மழை பெய்யும் பட்சத்தில் அணைகளின் நீர்மட்டத்தை தொடர்ந்து கண்காணித்தல், மாநில பேரிடர் மீட்பு மைய செயல்பாடுகளை துரிதப்படுத்துதல் மற்றும் வருவாய் துறையினருடன் பிற துறைகள் இணைந்து மீட்பு பணிகளை மேற்கொள்ளுதல், மழை வெள்ள பாதிப்பு தடுப்பு குழுக்களை தயார் நிலையில் வைத்திருத்தல் பற்றிய அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 10 பேருக்கு கொரோனா பாதிப்பு

சென்னை, டிச.7

தமிழகத்தில் நேற்று 4 ஆண்கள், 6 பெண்கள் உள்பட மொத்தம் 10 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக சென்னையில் 3 பேர் உள்பட மொத்தம் 7 மாவட்டங்களில் தொற்று பாதிப்பு பதிவாகியுள்ளது. தேனி, தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட 31 மாவட்டங்களில் பாதிப்பு இல்லை. தமிழகத்தில் கொரோனா தொற்றால் நேற்று எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு ஏற்படவில்லை.

அமீரகத்தில் லாட்டரி குலுக்கலில் தமிழக வாலிபருக்கு ரூ.66 கோடி பரிசு

சார்ஜா, டிச.7–

ஐக்கிய அமீரகத்தில் உள்ள சார்ஜாவில் வசித்து வருபவர் தமிழகத்தை சேர்ந்த காதர் ஹுசைன். இவர் அங்கு உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.31 ஆயிரம் சம்பளத்தில் பணியாற்றி வருகிறார். சமீபத்தில் அமீரகத்தில் உள்ள அதிர்ஷ்ட குலுக்கலின் லாட்டரி சீட்டை நண்பரின் உதவியுடன் வாங்கி யுள்ளார். அதனை வாங்கி விட்டு விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்து விட்டார். பின்னர், அதிர்ஷ்ட குலுக்கலை அங்கிருந்து சமூக வலைத்தளம் மூலமாக பார்த்துள்ளார்.

அப்போது அவருக்கு 3 கோடி திர்ஹாம் (இந்திய மதிப்பில் சுமார் 66 கோடி ரூபாய்) பரிசு கிடைத்தது தெரிய வந்துள்ளது. தற்போது அவர் உடனடியாக பரிசை பெற சார்ஜா சென்றுள்ளார். பரிசு கிடைத்தது பற்றி அவர் கூறுகையில், தனது குடும்பத்தினரை அமீரகம் அழைத்து வந்து இங்கேயே சொந்தமாக தொழில் தொடங்கலாம் என திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதிக விலைக்கு மது விற்பனை: 2,822 டாஸ்மாக் பணியாளர்கள் மீது நடவடிக்கை

அமைச்சர் செந்தில்பாலாஜி தகவல்

சென்னை, டிச.7

அதிக விலைக்கு மது விற்பனை செய்ததாக 2,822 டாஸ்மாக் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள அரசு மதுபான கடைகளில் (டாஸ்மாக்) மதுபானங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், குளிரூட்டப்பட்ட மதுபானங்கள் அதிகபட்ச சில்லரை விற்பனை விலையைவிட அதிகமாக விற்பனை செய்யப்படுவதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

இதுகுறித்து கேட்டபோது, தலைமைச் செயலகத்தில் மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கூறியதாவது: கூடுதல் விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாக வந்த புகார்களின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டது. அதன்படி, 2,822 பேர் மீது டாஸ்மாக் நிர்வாகம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 852 மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த முறைகேடுக்கு துணைபோன 1,970 மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை பணியிட மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கூடுதல் விலைக்கு மதுவை விற்பனை செய்த விற்பனையாளர் மற்றும் மேற்பார்வை யாளர்களிடம் இருந்து ரூ.4.61 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் சட்டவிரோதமாக பார் நடத்தியதாக 798 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த 4 மாவட்டங்களில் பார் நடத்த ஐகோர்ட் தடை விதித்துள்ள நிலையில், சட்டவிரோதமாக பார் நடத்தி மதுபானம் அருந்த அனுமதித்த பார் உரிமையாளர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

சான்றிதழ் காணாமல் போனது பற்றி அறிவிப்பு

எனது கட்சிக்காரர் ரேவதி எம். (ஆதார் எண்.3864 1752 3992) த/பெ. எஸ். முனியசாமி அவர்கள் எனது கட்சிக்காரர் அவர் ஸ்கூல் ஆப் நர்சிங், செங்கல்பட்டு மெடிக்கல் காலேஜ், செங்கல்பட்டு Diploma in General Nursing and Midwifery Certificate, No. 24842 கொண்ட ஒரிஜினல் சர்டிபிகேட் கடந்த 24.11.2022 அன்று சுமார் 11.30 மணியளவில் பல்லாவரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து பல்லாவரம் சுரங்கப்பாதை அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு ஜெராக்ஸ் எடுக்க வரும்போது அசல் சான்றிதழ்கள் காணாமல் போய்விட்டது.

E. பாரிவள்ளல், வழக்கறிஞர்,
தாம்பரம், ஒருங்கிணைந்த நீதிமன்றம்,
சென்னை-600 045
தொலைபேசி எண்: 9381056129

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதல் ஏற்பு மனு எண். 701/2022

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXXIX/1925
தொடர்பான மனுவில் 19.07.2010 அன்று உயில் எழுதாமல் இறந்து போன டாக்டர் எம்.எஸ். வத்சலா அவர்களுடைய பங்குகள் தொடர்பான மனு

1) சிவகாமசுந்தரி வன்கா
த/பெ. லேட் Dr. டி.எம். நச்சினார்கினியன்
தற்போதைய விலாசம்:
பழைய நெ.53, புதிய நெ.26
பரிபூரண விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004
நிரந்திர இருப்பிடம்
12687NW மெஜஸ்டிக் செக்குயா
வே போர்ட்லான்ட் Or. 97229, யுஎஸ்ஏ
2) டி.என். கீதா, த/பெ. லேட் Dr. டி.எம். நச்சினார்கினியன்
பழைய நெ.53, புதிய நெ.26
பரிபூரண விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004 – மனுதாரர்கள்

சென்னை-600 004, மயிலாப்பூர், பழைய நெ.53, புதிய நெ.26,பரிபூரண விநாயகர் கோயில் தெருவில் வசித்து வந்தவரும் 19.07.2010 அன்று இறந்து போனவருமான (லேட்) Dr. டி.எம். நச்சினார்கினியன் மனைவியுமான டாக்டர் எம்.எஸ். வத்சலா அவர்களின் பங்கு பத்திரம் தொடர்பான மனு. சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 23.01.2023 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருப்பதால். மேற்படியாரின் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமை சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ந் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். கிருஷ்ணசாமி
ஆர். ராமசந்திரன்
மனுதாரர்களின் வழக்கறிஞர்கள்
நெ.17, சட்ட பணியறைகள்
உயர்நீதிமன்ற கட்டிடங்கள்
சென்னை-600 104

உப்பலபு சுரேஷ்குமார்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு-I
உயர்நீதிமன்றம்
சென்னை-104

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதல் ஏற்பு மனு எண். 3/2022

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXXIX/1925 மற்றும் 12.04.2019 அன்று இறந்து போன ஆர். ஸ்ரீவத்சன் அவர்களுடைய பங்கு பத்திரங்கள் தொடர்பான வாரிசுரிமை கோரும் மனு

திருமதி. சரண்யா ஸ்ரீவத்சன்
க/பெ. (லேட்) ஆர். ஸ்ரீவத்சன்
நெ.2, 1வது குறுக்கு தெரு, சாஸ்திரி நகர்,
அடையார், சென்னை-600 020 – மனுதாரர்

எதிர்

1) திருமதி. ஸ்ருதி கிருஷ்ணா
க/பெ. கிருஷ்ண மோனியன், த/பெ. (லேட்) ஆர். ஸ்ரீவத்சன்
223, போன்ட்கிராரப்ட் லேன்,
துர்காம், NC 27705 USA
2) திரு. ஸ்ரஸ்தா ஸ்ரீவத்சன்
த/பெ. (லேட்) ஆர். ஸ்ரீவத்சன்
நெ.2, 1வது குறுக்கு தெரு, சாஸ்திரி நகர்,
அடையார், சென்னை-600 020 – எதிர்மனுதாரர்கள்

சென்னை-600 020, அடையார், சாஸ்திரி நகர், 1வது குறுக்கு தெரு, நெ.2 என்ற முகவரியில் வசித்து வந்து 12.04.2019 அன்று இறந்து போன ஆர். ஸ்ரீவத்சன் அவர்கள் விட்டு சென்ற பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமை சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 23.01.2023 அன்று காலை 10.30 மணிக்கு நடவடிக்கைகளை பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ந் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

P.B.சம்பத்குமார்
G. மதன்ராஜ்
R. கோவிந்தபிரபு
மனுதாரர்களின் வழக்கறிஞர்கள்
கதவு நெ.10, வடக்கு போக் ரோடு,
டாக்டர் B. நரசிம்மன் ரோடு,
முதலாவது தெரு, தி.நகர்,
சென்னை-600 017

உப்பலபு சுரேஷ்குமார்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு-I
உயர்நீதிமன்றம்
சென்னை-104

Chola Financial Holdings
murugappa

சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', எண். 234, N.S.C. போஸ் சாலை, சென்னை – 600 001.
Tel: 044-42177770-5; Fax: 044-42110404
E-mail id: investorservices@cfhl.murugappa.com Website: www.cholafhl.com
CIN:L65100TN1949PLC002905

உறுப்பினர்களுக்கான அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்) பிரிவு 124 (6) இன் கீழ், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை பரிமாற்றம் மற்றும் திரும்ப பெறுதல், விதிகள் 2016இன் கீழ் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் அதிகாரர வரம்பில் விடப்படும் அறிவிப்பு.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின்படி தொடர்ந்து 7 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் செலுத்தப்படாமல் அல்லது கோரப்படாமல் கிடக்கும் ஈவுத் தொகைகள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட அனைத்து பங்குகளும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் (IEPF ஆணையம்) டிமேட் கணக்கிற்கு மாற்றுவதற்கு மேற்படி சட்டம், விதிகளில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி 2015-2016 நிதியாண்டிற்கு வழங்கப்பட்ட இடைக்கால ஈவுத்தொகை IEPF ஆணையத்திற்கு மாற்ற வேண்டிய கடைசி தேதி 12 மார்ச், 2023 ஆகும். மேற்கண்ட விதிகளின்படி ஆணையத்தின் டிமேட் கணக்கிற்கு மாற்றப்படவுள்ள பங்குகளைக் கொண்ட பங்குதாரர்களுக்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக தனித்தனியே தகவல் அனுப்பப்படுகின்றன. சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் நிறுவனம் / கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் (RTA)க்கு தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுவனம் / RTAயிடம் ஈவுத்தொகையைப் பெற்றுக்கொள்ள உரிய ஆவணங்கள், 22 பிப்ரவரி, 2023க்குள் பெறப்படவில்லை எனில் IEPF ஆணையத்தின் விதிகளின்படி வேறு அறிக்கை இன்றி பங்குகள் ஆணையத்தின் டிமேட் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேலும் IEPF ஆணையத்திற்கு மாற்றப்படவுள்ள பங்குகள், பங்குதாரர்களின் பெயர், ஃபோலியோ எண் / DP ID / Client ID நிறுவனத்தின் இணையதளத்தில் ஏற்பாடுகளின்படி http://www.cholafhl.com பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

IEPF ஆணையத்திற்கு மாற்றப்பட்ட ஈவுத்தொகைகளும் அவற்றுக்குரிய பங்குகளும் அந்த பங்குகளுக்குச் சேரும் பலன்கள் எதுவும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து IEPF ஆணையத்திடம் பங்குதாரர்கள் அதற்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி திரும்பப் பெறலாம்.

மேலும் தகவல் / தெளிவுபடுத்தலுக்கு சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் பின்வரும் முகவரியில் நிறுவனங்கள் அல்லது RTA உடன் தொடர்பு கொள்ளலாம்

சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
'டேர் ஹவுஸ்', எண். 234, என்.எஸ்.சி.போஸ் சாலை, சென்னை - 600 001.
Tel: 044-42177770-5; Fax: 044-42110404
Email: investorservices@cfhl.murugappa.com
Website: www.cholafhl.com

கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்
கார்வி செலினியம் டவர் B, மனை எண் 31 - 32, காச்சிபவ்லி, ஃபைனானன்சியல் மாவட்டம்
நானக்ரம்குடா, ஹைதராபாத் - 500 032
Toll Free No.: 1800 309 4001Fax No: 040-2342 0814
Email: einward.ris@kfintech.com
Website: www.kfintech.com or ris.kfintech.com

மேலும், பங்குதாரர்கள் தங்கள் KYC விவரங்களை RTA/ டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சோழமண்டலம் பைனான்சியல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் சார்பாக
E.கிருத்திகா
நிறுவன செயலாளர்

சென்னை
டிசம்பர் 6, 2022

படிவம் எண். INC-25A

பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்றுவதற்கான செய்தித்தாளில் வெளியிடப்பட வேண்டிய விளம்பரம்

பிராந்திய இயக்குநர், நிறுவன விவகாரங்கள் அமைச்சகம், தெற்கு பிராந்தியம், சென்னை முன்பாக

2013, நிறுவனங்கள் சட்டம், பிரிவு 14 மற்றும் நிறுவனங்கள் (பதிவு செய்தல்) விதிகள், 2014 விதி 41 இன் படி சம்பந்தப்பட்டது

மற்றும்

வோல்டெக் மனுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
சர்வே நெ. 212/1, 212/2 & 213/3, பிள்ளைப்பாக்கம் கிராமம்,
ஸ்ரீ பெரும்புதூர் தாலுகா, ஸ்ரீ பெரும்புதூர்,
காஞ்சிபுரம் – 602105 என்ற முகவரியை அதன் பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ளது. ....விண்ணப்பதாரர்

2013 நிறுவனங்கள் சட்டம், பிரிவு 14இன் கீழ் மற்றும் மேற்குரிய விதிகளின்படி மத்திய அரசுக்கு பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக விண்ணப்பம் செய்ய விரும்பும் இந்நிறுவனம் 2022 நவம்பர் 19ம் தேதி சனிக்கிழமை நடைபெற்ற கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தில் பொது நிறுவனத்தை தனியார் நிறுவனமாக மாற்ற சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட தீர்மானத்தால் நிறுவனத்தின் மாற்றம் / நிலையை பாதிக்கப்படக்கூடிய எந்தவொரு நபரும் தனது எதிர்ப்பை மற்றும் எதிர்ப்பின் காரணங்களை பிரமாணப் பத்திரத்தின் மூலம் தனது ஆட்சேபனைகளை பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் தெற்கு பிராந்திய இயக்குநரின் அலுவலகமான 5வது மாடி, சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை – 600006 என்ற முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் மற்றும் அதன் நகலை விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு அதன் பதிவு அலுவலகத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அனுப்ப வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : சர்வே நெ. 212/1, 212/2 & 213/3, பிள்ளைப்பாக்கம் கிராமம், ஸ்ரீ பெரும்புதூர் தாலுகா, ஸ்ரீ பெரும்புதூர், காஞ்சிபுரம் – 602105.

விண்ணப்பதாரர் சார்பாக,
ஒப்பம்/–
முருகேசன் உமாபதி
நிர்வாக இயக்குனர்
இ.அ.எண் : 00729251

தேதி : 06.12.2022
இடம் : காஞ்சிபுரம்

OrchidPharma
— A Dhanuka Group Company —

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்
CIN : L24222TN1992PLC022994
பதிவு அலுவலகம்: 'ஆர்க்கிட் டவர்ஸ்', 313வள்ளுவர் கோட்டம்
நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
போன் : +91442821 1000, பேக்ஸ் : +91442821 1002
Website: www.orchidpharma.com, I Email: corporate@orchidpharma.com

அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

டிசம்பர் 01, 2022 தேதியிட்ட அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள சிறப்பு அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டின் (''கம்பெனி'') உறுப்பினர்களுக்கான அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") **வியாழக்கிழமை, டிசம்பர் 29, 2022 அன்று காலை 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** பதிவு அலுவலகம், ஆர்க்கிட் டவர்ஸ், எண்.313, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034, தமிழ்நாடு (கூட்டம் நடைபெறும் இடம் என கருதப்படுகிறது) என்ற முகவரியில் காணொலி காட்சி ("VC")/பிற ஒலி ஒளி வழிமுறைள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உலக அளவில் தொடரும் கோவிட் 19 தொற்று காரணமாக, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் மே 05, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.20/2020, ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.14/2020 மற்றும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020என்படி ஒரு பொதுவான இடத்தில் கூட்டத்திற்கு உறுப்பினர்கள் நேரடியாக ஆஜராகாமல் காணொலி காட்சி ("VC")/பிற ஒலி ஒளி வழிமுறைள் ("OAVM") மூலம் நிறுவனத்தின் அசாதாரண பொதுக்கூட்டத்தை நடத்த அனுமதிக்கிறது. மேலே கூறப்பட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015 ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் அசாதாரண பொதுக்கூட்டம் VC/OAVM மூலம் நடத்தப்படுகிறது. எனவே, உறுப்பினர்கள் VC/OAVM மூலம் மட்டுமே அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

மேற்கூறிய எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவின் மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கையினால் அனுமதிக்கப்பட்ட தளர்வு ஆகியவற்றின்படி, நிறுவனம் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வழிமுறைகள் மூலம் மட்டுமே அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட எம்சிஏ சுற்றறிக்கைள் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பின் காகித நகல்கள் அனுப்புவது கைவிடப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அவ்வாறு செய்யவில்லை எனில், உடனடியாக தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யுமாறு/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எ) அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பங்குகளை டிமேட் முறையில் வைத்திருக்கும் பட்சத்தில்

பி) காகித முறையில் பங்குகள் இருந்தால், போலியோ எண் விவரங்களுடன் சுய சான்றளிக்கப்பட்ட பான் அட்டையின் நகலை இணைத்து பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்களுக்கு (ஆர்டிஏ)rta@abhipra.com மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.

அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு கம்பெனியின் வலைத்தளம் www.orchidpharma.com, நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட் வலைத்தளம்www.nseindia.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com ல் உள்ளது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவற்றின் நகல் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (CDSL) (அசாதாரண பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவுக்கு VC/OAVM வசதியை அளிக்கும் முகவர்) வலைத்தளம் www.evotingindia.com ல் உள்ளது. எந்தவொரு தகவல் தொடர்புக்கும், பங்குதாரர்கள் பின்வரும் மின்னஞ்சல் ஐடிக்கு கோரிக்கைகளை அனுப்பலாம்: : cs@orchidpharma.com. .

கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, இந்திய நிறுவன செயலாளர்களால் வழங்கப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலக தரநிலை ("எஸ்எஸ்2") மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள